<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 147/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமரேசன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மாரிமுத்து | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

<u>முதல் விசாரணை</u>

நான் சங்கர் நகரில் வசித்து வருகிறேன். நெடுஞ்சாலை துறையில் பணியில் இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். எனது நண்பர் சிவசங்கர் வெளியூருக்கு சென்றிந்தார். என்னை அவரது வீட்டை பார்த்துக் கொள்ளுமாறு சொல்லியிருந்தார். கடந்த 27.09.2024 ம் தேதியன்று நானும் வெளியூர் சென்றிருந்தேன். திரும்பி வந்த பார்த்த போது கதவு திறந்து இருந்தது. போலிசில் புகார் கொடுத்தேன்.கேட் திறந்திருந்தது. துணிகக் சிதைந்து கிடந்தது. பீரோ உடைக்கப்பட்டிருந்தது பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அசா.ஆ.1 என்று குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1,3 ம் <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 எந்த வருடம் நெடுஞ்சாலை துறையில் இருந்த ஓய்வு பெற்றிர்கள் என்றால் 4 வருடத்திற்கு முன்பு. சிவசங்கரின் பெண் பெங்களுரில் வேலையில் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அவர் எங்கு தங்கியுள்ள என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். அவர் ஹாஸ்டலா

அல்லது வீட்டிலா என்றால் சொந்த வீட்டில் தங்கியுள்ளார். அவருக்கு திருமணம் ஆகி விட்டதா என்றால் இல்லை. கடந்த 27.08.2024 ம் தேதி சிவசங்கர் தனது வீட்டை பார்த்து கொள்ளுமாறு சொல்லிவிட்டு சென்று விட்டார் என்றால் சரிதான். சிவசங்கரில் மனைவிக்கு எந்த சிகிச்சை பெற்றார் என்ற விவரம் தெரியாது என்றால் ஹார்ட் ஆப்ரேசன்.

2. 27.09.2024 ம் தேதி தான் வெளியூர் இருந்து வந்திர்கள் என்றால் ஆமாம் அந்த தேதியில் தான்அவர் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை பார்த்திர்கள் என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எத்தனை கிமீ என்றால் 2 கி மீ. வீடு பூட்டு உடைக்கப்ட்டிருந்தது பற்றி போலிசிற்கு 100 தகவல் சொன்னிர்களா என்றால் 100 க்கு போன் செய்தேன். 27.09.2024 ம் தேதி போலிசார் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 4 பேர். காலை எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் மாலை 7.30 மணி இருக்கும்.

3. சம்பவத்தை எத்தனை மணிக்கு பார்த்திர்கள் என்றால் மாலை 6.30 மணிக்கு. அதன்பின்னிட்டு காவல் நிலையம் சென்றிர்களா என்றால் 100 க்கு போன் செய்தேன் சிவசங்கருக்கு தகவல் சொன்னிர்களா என்றால் போனில் சொன்னேன். சிவசங்கர் தகவல் சொன்ன போது மணி என்ன என்றால் 100 க்கு போன் செய்த உடனே அவருக்கு போன் செய்தேன். அவர் புகார் கொடுகக சொன்னாரா என்றால் சரிதான். ரூ.50,000/- பணம் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை ரூபாய் நோட்டுகள் என்று தெரியாது என்றால் சரிதான். சிவசங்கர் வீட்டிலிருந்து எந்த பொருளும் காணாமல் போகவில்லை என்றால் சரிதான்.

4. காவல் நிலையத்தில புகார் என்ன எழுத சொன்னார்களா என்றால் ஆமாம் சொன்ன விவரத்தை எழுதி கொடுததிர்கள் என்றால ஆமாம். உங்களுக்கு பன்னீர் செல்வம், சண்முகம், சாபி ஆகியோர் பழக்கம் என்றால் சரிதான். அவர்ககளை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 10 வருடத்திற்கு மேல். புகார் மனு உங்களுக்கு கொடுத்தார்களா என்றால் சரிதான். புகாரில் 19 வது லைன்னில் பூஜை ரூம்மின் மேற்கில் கீழே இருந்த என்ற வார்த்தை இடைசொல்லாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அரசு அதிகாரி என்பதால் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக புகார் கொடுத்துள்ளிர்கள் என்றால் சரியல்ல.

4ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/– T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.